சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்த் திரைப்பட வரலாற்றில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்து திரைப்பட உலகில் மாபெரும் சாதனை படைத்தவர்.

அவர் திரைப்படத் துறையில் 1,000 படங்களுக்கு மேல் நடித்து கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார். கலைத் துறையில் அவர் ஆற்றிய ஈடுஇணையற்ற பங்களிப்பிற்காக மத்திய அரசால் வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றான பத்மஸ்ரீ விருது, தேசிய விருது மற்றும் தமிழக அரசின் சார்பில் கலைமாமணி விருது என எண்ணற்ற விருதுகளைப் பெற்றவர்.

அவரது மறைவு தமிழ் திரைப்படத் துறையினருக்கு மிகப் பெரிய இழப்பாகும். அவருடைய இடத்தை யாரும் ஈடு செய்ய முடியாது.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(ஈ) திரு. ஏ.பி. பரதன், இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் திரு. ஏ.பி. பரதன் அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.

"இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முதுபெரும் தலைவரும், மூத்த அரசியல்வாதியும், ஏழையெளிய, உழைக்கும் மக்களுக்கு தன்னலமற்ற சேவை புரிந்தவரும், அடித்தட்டு மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவருமான திரு. ஏ.பி. பரதன் அவர்கள் தனது 92-வது அகவையில் 2-1-2016 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்துள்ள கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த மாமனிதர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும்

2016 ஜனவரி 21]

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

மின்மாற்றி

***51078—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, விழுதமங்கலம் கிராமத்திலுள்ள 63 KVA *மின்மாற்றிக்குப் பதிலாக 100* KVA *திறன் கொண்ட மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதி, விழுதமங்கலம் கிராமத்தில் இருந்த 63 KVA *விழுதமங்கலம்* SS II *மின்மாற்றி, 100* KVA *திறன் கொண்ட மின்மாற்றியாக 22–11–2014 அன்று மாற்றியமைக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*